IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.63/2024

DEPOSITION OF WITNESS P.W.4

| | | |
|---|---|---|
| NAME | : | BAVANI |
| HUSBAND NAME | : | MANI |
| VILLAGE | : | CHAKKUTTAI |
| OCCUPATION | : | HOUSE WIFE |
| AGE | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 5th day of AUGUST 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச 317 கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சக்கரகுட்டையில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரி எனது தம்பி. காயம்பட்ட நபர் எனது அப்பா. என்வீடு ஊருக்கு ஒதுக்குபுறமாக உள்ளது. எனது அப்பா என் வீட்டில் தங்கிவந்தார். 21.01.2024 ம்தேதி மாலை 4 மணியளவில் உட்காரவைத்துவிட்டு நான் ஊருக்குள் சென்று வந்தேன். நான் திரும்ப வரும்போது மாலை 5 மணியளவில் தாமேதரன் சேரில் இருந்த என் அப்பாவை மார்பு மீது எட்டி உதைத்து கீழே தள்ளி புரட்டி அடித்துள்ளார். சண்டையை எனது மூத்தார் குப்பு ராஜ் சண்டை விலக்கிவிட்டார், நான் வந்து பார்த்த போது என்னிடம் என் அப்பா தமோதரன் தன்னை காலால் உதைத்தாக சென்னார். என்னால் முடியவில்லை என்று சொன்னார்.அவருக்கு தண்ணீர் கொடுத்து நானும் என் கணவரும் ஆம்புலன்ஸ் வரவழைத்து பெல்லண்ட் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு மருத்துவர்கள் எனது அப்பாவிற்கு அறுவை சிகிச்சை அளித்தார்கள். அங்கு எனது அப்பா 6 நாள்கள் சிகிச்சையில் இருந்தார். பின்னர் அங்கிருந்து ராணிபேட்டை சிஎம்சி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்பு மருத்துவர்கள் சிகிச்சை அளித்தார்கள்.போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவ தினதன்று நான் வீட்டை விட்டு 4 மணிக்கு சென்றேன். எனக்க யாரும் தகவல் சொல்லவில்லை. நானாக சென்று பார்த்த போது என் தகபனாருக்கு அடிப்பட்டு இருந்தார். போலிஸ் விசாரணையில் நான் தகவல் அறிந்த பின் நேராக பெல்லண்ட் மருத்துவமனைக்கு சென்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல அவ்வாறு குறிபிடவில்லை. என் தந்தையை நான் தான் மருத்துவமனை அழைத்து சென்றேன். ஆம்புலன்ஸில் பெல்லண்ட் மருத்துவமனைக்கு சென்றோம்.எத்தனைக்கு பெல்லண்ட் மருத்துவமனைக்கு சென்று இருந்தால் இரவு 8 மணக்கு.அங்கு அரை

மணிநேரம் வரை இருந்து இருப்போம். அதே ஆம்புலனஸில் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை வேறுயொரு வாகனத்தில் சென்றோம். எத்தனைக்கு மணிக்கு சென்றோம் வேலூர் அடுக்கம்பாறைமருத்துவமனைக்குசென்றோம் என்று ஞாபகம் இல்லை. நான் பெல்லண்ட் மருத்துவமனைக்கு சென்று அங்கிருந்து வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்றதாக சொல்வது பொய்யல்ல.முதல்முறையாக நீதிமன்றத்தில் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு என் தகப்பானரைச் சேர்த்து விட்டு அங்கு எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் அன்று மற்றும் மறுநாள் முழுவதும் இருந்தேன். அதன் பிறகு யார் இருந்தார்கள் என்றால் என் சகோதரிகள் இருந்தார்கள். நான் இருக்கும்பொழுது திருவலம் போலிஸார் வந்து என் தகப்பானரை விசாரிக்க வரவில்லை. வழக்கு சம்பவத்திற்கு என்ன காரணம் என்றால் நிலம் பிரச்சனை . முதல் விசாரணையில் சொன்ன அனைத்தும் பொய் என்றும் வழக்கு சம்பந்தமாக எதும் தெரியாது என்றால் சரியல்ல. என் சகோதருக்கு காலில் எலும்பு புற்றுநோய் உள்ளது என்றால் அது பற்றி எனக்க தெரியாது. அதன் காரணமாக அவரை வேலையில் இருந்து அனுப்பிவிட்டாரகள் என்றால் தெரியாது. அவர் தொடர் சிகிச்சைக்காக பெங்களூரில் உள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அவருக்கு கால் உபயோகித்து எந்த வேலையும் செய்யமுடியாது என்றால் எனக்கு தெரியாது. எதிரியால் எட்டி யாரையும் உதைத்து காயம்படுத்த முடியாது என்றால் எனக்கு தெரியாது. அவர் ஏமாத்தி சொத்தை எழுதிகொண்டோம் என்று பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.63/2024

DEPOSITION OF WITNESS P.W.5

| | | |
|---|---|---|
| NAME | : | MANI |
| HUSBAND NAME | : | GOVINDHAN |
| VILLAGE | : | CHAKKUTTAI |
| OCCUPATION | : | EX ARMY |
| AGE | : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 5th day of AUGUST 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர்இல்லை . குவிமுச 317 கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சக்கரகுட்டையில் வசித்து வருகிறேன். ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். தற்போது மளிகை கடை வைத்துள்ளேன். வழக்கின் எதிரியை தெரியும். காயம்பட்ட நபர் தெரியும். 21.01.2024 ம்தேதி சுமார் மாலை 5 மணியளவில் நான் என் வீட்டுக்கு வரும்போது என் வீட்டின் காம்பொண்ட் பட்டி கிரில் கேட்டை பூட்டி எனது அண்ணன் பாதுகாத்துஇருந்தார். எனது மாமனார் சுப்பிரமணி பட்டிகுள்ளே இருந்தார். எனது மாமனார் முடியாத நிலையில் காணப்பட்டார். எனது மாமனாரை ஆம்புலன்ஸ் வரவழைத்து பெல்லண்ட் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு மருத்துவர்கள் எனது மாமாவிற்கு அறுவை சிகிச்சை அளித்தார்கள்.பின்னர் அங்கு இருந்து எனது மாமாவை ராணிபேட்டை சிஎம்சி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம்..போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

முதல் விசாரணையில் சொன்னது பொய் என்றும் வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.
C.C.NO.13/2022

DEPOSITION OF WITNESS P.W.6

| | | |
|---|---|---|
| NAME | : | DHAYALAN |
| FATHER'S NAME | : | SANMUGAM |
| VILLAGE | : | VELLORE |
| OCCUPATION | : | SI |
| AGE | : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 5th day of AUGUST 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது வேலூர் மாவட்டம் போக்குவரத்து நெடுஞ்சாலை துறை காவல் நிலையத்தில் உதவில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 23.08.2021 ம் தேதி காலை 8.00 மணி அளவில் திருவலம் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது சரவணபாபு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று அதன் தன்மை படி நிலைய குற்ற எண்.396/2021 சட்டப்பிரிவுகள்279, 337 மற்றும் 304(எ) இதச பிரிவின் படி வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் முதல் தகவல் அறிக்கையும் புகார் மனுவையும் இணைத்து கணம் குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை தனது எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜீவா, தரணிபதி ஆகியோர் முன்னிலையில் சம்பவம் இடம் மற்றும் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தேன். அது முறையே **அ.சா.ஆ.3 மற்றும் அ,சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் விபத்தில் இறந்து போன இருச்சன் என்பவரின் உடலை 23.08.2021 ம் தேதி சாட்சிகள் நடராஜன், சங்கர், ராஜாமணி, சேட்டு, நடராஜன் த/பெ.முனிசாமி ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் மேற்படி பஞ்சாயத்தார் சாட்சிகளின் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் சரவணபாபு, விஜயகுமார், செந்தில்குமார், மகேந்திரன், கருணாநிதி, சரவணன், ஜெகன், புவேனேஷ்வரி, ஜீவா, தரணிபதி ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் விபத்தில் இறந்த போன இருச்சன் என்பவரின் உடலை அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து உடற்கூறாய்வு செய்தேன். பின்னர் விபத்தில் இறந்து போன இருச்சன் என்பவரின் உடலை உடற்கூராய்வு செய்து மருத்துவர் மகேந்திரன் என்பவரை விசாரித்து உடற்கூறாய்வு சான்றிதழ் பெற்றேன். அந்த சான்று **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் வழக்கின் எதிரியை ஜெய்சங்கர் என்பவரை 25.10.2021 ம் தேதி காரணம்

கூறி கைது செய்து தக்க இருநபர் ஜாமில் பிணையில் விடுத்வித்துள்ளார். பின்னர் விபத்துக்குள்ளான TN 23 CP 1087 BAJAJ PULSAR இருசக்கர வாகனம் மற்றும் விபத்து ஏற்படுத்திய TN 23 CL 9862 BAJAJ PULSAR யும் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வறிக்கை பெற்றேன். அந்த ஆய்வறிக்கைகள் முறையே **அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் தலைமை காவலர் உமாபதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு கோப்பை ஆய்வாளர் ஆனந்தன் என்பவரின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் ஆனந்தன் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 13 வரை விசாரணை செய்து என்னிடமும் கூறியதை அவரிடமும் கூறியதால் தனியாக மறு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது 25.10.2021 ம் தேதி 279, 337 மற்றும் 304(எ) இதச பிரிவு படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய ஆஜர் எதிரியை அறிவுறுத்தியும் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 05.08.2025 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU

Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.